**தேசிய வியாபார முகாமை நிறுவனம் மற்றும் அதன் துணைக் கம்பனி - 2024**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 மறுப்பு அபிப்பிராயம்**

தேசிய வியாபார முகாமை நிறுவனத்தினதும், அதன் துணைக் கம்பனியினதும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிறுவனத்தின் அதனுடன் கூடிய நிதிக்கூற்றுக்கள் குறித்து நான் எவ்வித அபிப்பிராயத்தையும் தெரிவிக்கவில்லை. இந்த நிதிக்கூற்றுக்கள் குறித்த கணக்காய்வு அபிப்பிராயத்துக்கு அடிப்படையை வழங்க போதுமான பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை என்னால் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

**1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை என்னால் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வின் அடிப்படையில் நிறுவனம் மற்றும் அதன் துணைநிறுவனங்களின் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும், அபிப்பிராயத்தை மறுப்பதற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான ஒரு அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாதுள்ளேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

#### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை கணக்கீட்டுத் நியமம் 16 இன் 34 ஆம் பந்தியின்படி, காணி, கட்டடம் மற்றும் உபகரணங்கள் தேவைக்கேற்ப ஒவ்வொரு 3 அல்லது 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டும். கணக்கீட்டுக் கொள்கை 2.2.1 (அ) இன் படி, நிறுவனத்தினால் (NIBM) ஒவ்வொரு 03 ஆண்டுகளுக்கு ஒருமுறை இவை மீள்மதிப்பீடு செய்யப்படுவதாக நிதி அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், நிறுவனத்தினால் (NIBM) பயன்படுத்தப்படும் ரூபா 1,455.25 மில்லியன் கிரயமான 05 சொத்துப்பிரிவுகள் மீள்மதிப்பீடு செய்யப்படவில்லை. | 2024 ஆம் ஆண்டிற்கான சொத்துக்களின் மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. | சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டும் என்பதுடன், அவை கணக்கீட்டுத் நியமங்கள் மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்க கணக்குகளில் சேர்க்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பயன்பாட்டு உரிமைச் சொத்துக்களின் கடன்மீட்புத் தொகை ரூபா 2.85 மில்லியனால் அதிகமாகக் கணக்கிடப்பட்டதன் காரணமாக, மீளாய்வாண்டுக்கான இலாபம் மற்றும் குத்தகை அடிப்படையில் சொத்துக்களின் பெறுமதி குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | இது சரி செய்யப்படும் | பயன்பாட்டு உரிமைச் சொத்துக்களுக்கான தேய்மானத்தைக் துல்லியமாகக் கணக்கிட்டு, சீர் செய்வதன் மூலம் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | குத்தகை வட்டிக் கணக்கீட்டில் ஏற்பட்ட பிழையினால், குத்தகை வட்டிச் செலவு ரூபா 0.78 மில்லியனால் அதிகரித்துள்ளது. மேலும், அந்தப் பிழையைத் திருத்திய போது ஏற்பட்ட தவறான பதிவினால், குத்தகை பொறுப்பு ரூபா 0.78 மில்லியனால் குறைவடைந்துள்ளதுடன், முந்தைய ஆண்டின் எஞ்சிய வருவாய் மீதி ரூபா 1.56 மில்லியனால் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | இது சரி செய்யப்படும் | குத்தகை வட்டியானது துல்லியமாகக் கணக்கிடப்பட வேண்டும் என்பதுடன், அவை முறையாகக் கணக்குகளில் பதிவு செய்யப்பட வேண்டும். |

### 1.5.3 பொருத்தமற்ற பெறுமதி கணிப்பீடு அல்லது மதிப்பீடு

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனத்தின் (NIBM) முழுமையான உரிமையுடைய துணைக் கம்பனியொன்றான தேசிய வியாபார முகாமைத்துவ கல்வி நிறுவனத்தின் (NSBM) பங்குடைமைகள் 2024 ஜூலை 15ஆம் திகதியன்று ரத்து செய்யப்பட்டதுடன், அது அரசாங்கம் அல்லது அரசாங்கத்துடன் தொடர்புடைய நிறுவனங்கள் அல்லாத மூன்றாம் தரப்பினரின் உத்தரவாதங்களைக் கொண்ட ஒரு வரையறுக்கப்பட்ட நிறுவனமாக மாற்றப்பட்டது. இலாபமீட்டும் மற்றும் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வரும் அரச நிறுவனத்தின் துணை நிறுவனமான தேசிய வியாபார | இந்தச் சொத்துக்களை அகற்றும் முறையானது அரசாங்கத்தின் அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாகவே மேற்கொள்ளப்பட்டதாகவும் அந்த கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு இணங்க எடுக்கப்பட்ட முடிவுக்கு மாத்திரமே NIBM இன் ஆளுநர் சபை தனது அனுமதியை வழங்கியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. | சொத்துக்களை அகற்றல் தொடர்பாக நாடாளுமன்றத்திற்கு ஒரு விசேட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பாகக் கிடைக்கப்பெறும் பரிந்துரைகளின் அடிப்படையில் எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் |

முகாமைத்துவ கல்வி நிறுவனத்தின் (NSBM) தேறிய சொத்துக்களின் புத்தகப் பெறுமதி, மாற்றப்பட்ட திகதியில் ரூபா 4,414.8 மில்லியனாக இருந்தது. இருப்பினும், ரூபா 1,627.68 மில்லியனைச் செலுத்தும் உடன்படிக்கையின் அடிப்படையில் அது உரிமையிலிருந்து நீக்கப்பட்டது. இந்த கொடுக்கல் வாங்கல் காரணமாக, தேறிய சொத்துக்களின் புத்தகப் பெறுமதியுடன் ஒப்பிடுகையில் NIBM நிறுவனத்திற்கு ரூபா 2,787.1 மில்லியன் நேரடி நஷ்டம் ஏற்பட்டுள்ளதுடன், இலாபமீட்டும் மற்றும் நிலையான வளர்ச்சியைக் கொண்ட ஒரு வணிக நிறுவனத்தின் சந்தைப் பெறுமதியானது முழுமையாக மூன்றாம் தரப்பிற்கு மாற்றப்பட்டுள்ளது. இந்தச் சொத்தை அகற்றுவதற்காகப் பின்பற்றப்பட்ட முறைமை மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவை கேள்விக்குரியதாக உள்ளதுடன், மாற்றப்பட்ட திகதியில் NSBM இன் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நியாயமான பெறுமதியில் மதிப்பிடப்படவில்லை. அதன்படி, மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் நிதி அறிக்கைகளில் இந்தக் கொடுக்கல் வாங்கல்கள் அங்கீகரிக்கப்பட்ட விதம், அளவிடப்பட்ட விதம் மற்றும் முன்வைக்கப்பட்ட விதம் ஆகியவற்றில் நிலவும் நிச்சயமற்ற தன்மை காரணமாக, தேசிய வியாபார முகாமைத்துவ கல்வி நிறுவனத்தின் (NSBM) முதலீட்டை அகற்றுதல் மற்றும் அது தொடர்பான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது நியாயமான முறையில் உறுதிப்படுத்த முடியவில்லை.

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெற வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதி நிலவரப்படி, நிலுவையிலுள்ள ரூபா 184.55 மில்லியன் தொகையில், 02 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையிலுள்ள ரூபா 63.58 மில்லியன் தொகையை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை | நிறுவனத்தின் மொத்த வருமானமான ரூபா 2.76 பில்லியனுடன் ஒப்பிடுகையில், ரூபா 63.58 மில்லியன் என்பது வெறும் 2 சதவீதமே ஆகும் என்பதுடன், இவ்வாறான நிலைமை கல்வித் துறையில் இயல்பான ஒன்றாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவையிலுள்ள கடன்களை உடனுக்குடன் அறவிடுவதை உறுதி செய்வதற்கும், கடன் நட்டம்ள ஏற்படுவதற்கான வாய்ப்புகளைக் குறைப்பதற்கும் முறையான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களுக்கான செயற்பாடுகள் கையேட்டின் 3.4 (x) ஆம் பிரிவு | ஒவ்வொரு அரச நிறுவனமும் ஒரு பதவியணித் தொடர்ச்சித் திட்டத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்றபோதிலும், இந்த நிறுவனத்திற்காக அத்தகைய பதவியணித் தொடர்ச்சித் திட்டமொன்று(Succession Plan) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பதவியணித் தொடர்ச்சித் திட்டமானது தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது. | விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க பதவியணித் தொடர்ச்சித் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும் என்பதுடன், அது கிரமமாக மீளாய்வு செய்யப்படவும் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2454.16 மில்லியன் பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 985.98 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 3440.14 மில்லியன் குறைவு அவதானிக்கப்பட்டது. தேசிய வியாபார முகாமை நிறுவனத்தின் (NIBM) முழுச் சொந்தமான துணை நிறுவனமான தேசிய வியாபார முகாமை நிறுவனத்தில் செய்யப்பட்ட முதலீட்டை, நியாயமான விலையில் விற்பனை செய்யத் தவறியமை இந்த குறைவுக்கு முக்கிய காரணமாக அமைந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 டிசம்பர் 02 ஆம் திகதியன்று நடைபெற்ற அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (COPE) கூட்டத்தில் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் மீளாய்வு செய்யப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களமானது ஊக்குவிப்புத்தொகைகளைக் கணக்கிடுவதற்காக ஏற்றுக்கொள்ளத்தக்க முறையியலை உருவாக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்ட போதிலும், இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படும் திகதி வரை அந்தச் செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டிருக்கப்படவில்லை. | புதிய ஊக்குவிப்புத்தொகை கணக்கிடும் முறையியல் தயாரிக்கப்பட்டு, 2022 ஜனவரி 21 ஆம் திகதியன்று நிரல் அமைச்சின் ஊடாக முகாமைத்தவ சேவைகள் திணைக்களத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், இதுவரை அதற்கான அனுமதி பெறப்படவில்லை. | அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றியகுழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட, ஊக்குவிப்புத்தொகை கணக்கிடும் முறையியலுக்கான அங்கீகாரத்தை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்குச் சொந்தமான 45 பேர்ச் காணியைக் கையகப்படுத்துவதற்கு 2017 ஜனவரி 18 ஆம் திகதியிட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும், இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படும் திகதி வரை அந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நிறுவனம் தவறியிருந்தது. | இந்த நிலத்தைக் கையகப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளைச் சம்பந்தப்பட்ட அமைச்சின் ஊடாக இந்த நிறுவனம் மேற்கொண்டிருந்த போதிலும், ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் அமைச்சரவைத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இதுவரை எடுக்கவில்லை. | அமைச்சரவைத் தீர்மானங்களுக்கு இணங்க, ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்குச் சொந்தமான நிலத்தை, தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனத்திற்கு (NIBM) கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இந்த நிறுவனத்திற்குச் (NIBM) சொந்தமான கொழும்பு மற்றும் ஏனைய 05 கிளைகளில் நிறுவப்பட்டுள்ள சிற்றுண்டிச்சாலைகளிலிருந்து வருமானத்தை ஈட்டும் | நிர்வாகக் குழுவின் அங்கீகாரத்துடன், நிறுவனத்தின் மேற்பார்வையின் கீழ் நலன்புரிச் சங்கத்தின் ஊடாகச் | சிற்றுண்டிச்சாலைகளை வாடகைக்கு விடுவதற்கு ஒரு சேவை வழங்குநரைத் தேர்ந்தெடுப்பதில் முறையான |

| | | |
|---|---|---|
| பொறுப்பு ஊழியர் நலன்புரிச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், இதன் மூலம் வாடகை வருமானமாக ஊழியர் நலன்புரிச் சங்கம் ஆண்டொன்றுக்கு ரூபா 1.26 மில்லியனைப் பெற்று வந்தது. இருப்பினும், சிற்றுண்டிச்சாலை பராமரிப்பு மற்றும் நாற்காலிகள், மேசைகள், உபகரணங்கள், நீர் மற்றும் மின்சாரம் உள்ளிட்ட பௌதிக வசதிகளுக்கான அனைத்துச் செலவுகளையும் நிறுவனமே (NIBM) பொறுப்பேற்றிருந்தது. முறையான விலைமனு கோரல் நடைமுறையைப் பின்பற்றி சேவை வழங்குநரைத் தேர்ந்தெடுத்திருக்க முடியும் என்ற போதிலும், அவ்வாறு செய்யாததன் காரணமாக, நிறுவனம் பெற்றிருக்கக்கூடிய வாடகை வருமானத்தை இழந்திருந்தது. | சிற்றுண்டிச்சாலையை இயக்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், அவர்கள் அதனைச் சிறப்பாக நடத்தி வருகின்றனர். எதிர்காலத்தில் முறையான விலைமனுகோரல் நடைமுறையைப் பின்பற்றி பொருத்தமான ஒரு தரப்பிடம் சிற்றுண்டிச்சாலையை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | விலைமனுகோரல் நடைமுறை பின்பற்றப்பட வேண்டும் என்பதுடன், அதன் மூலம் ஈட்டப்படும் வருமானம் NIBM கணக்கில் சேகரிக்கப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1976 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தினால் நிறுவப்பட்ட தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனம் (NIBM), 2009 ஆகஸ்ட் 12 ஆம் திகதியிட்ட 1614/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டங்களை வழங்குவதற்கான அனுமதியைப் பெற்றிருந்தது. பின்னர், தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனத்தில் (NIBM) உள்நாட்டுப் பட்டப்படிப்புகளை வழங்குவதற்கான அனுமதி இடைநிறுத்தப்பட்டு, அது தேசிய வியாபார முகாமைத்துவ கல்வி நிறுவனத்திற்கு (NSBM) வழங்கப்பட்டுள்ளதாக | உள்நாட்டுப் பட்டங்களை வழங்குவதற்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், நிறுவனச் சட்டத்தில் பட்டங்களை வழங்குவது தொடர்பான பிரிவு தற்பொழுது வரைவு செய்யப்பட்டு, மேலதிக நடவடிக்கைகளுக்காக நிர்வாகக் குழுவின் அனுமதியுடன் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சுக்கு | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து உள்நாட்டுப் பட்டங்களை வழங்கும் உரிமையை மீண்டும் பெறுவதற்கு NIBM உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதுடன், தனது வருமானத்தை அதிகரிப்பதன் மூலம் நிறுவனத்தின் நிலைத்தன்மையை உறுதி செய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 2012 ஆகஸ்ட் 13 ஆம் திகதியிட்ட கடிதம் மூலம் கல்வி அமைச்சருக்கு அறிவித்திருந்தது. 2024 ஜூலை 15 முதல் தேசிய வியாபார முகாமைத்துவ கல்வி நிறுவனமானது பொறுப்பு வரையறுக்கப்பட்ட ஒரு நிறுவனமாக மாற்றப்பட்டதன் காரணமாக, அதன் உரிமையை இழந்ததனால் தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனம் உள்நாட்டுப் பட்டங்களை வழங்கும் வாய்ப்பை முற்றாக இழந்தது. | அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | |

## 3.3 குறைப்பயன்பாடுடைய நிதியங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இரண்டாம் தளத்தில் அமைந்துள்ள சர்வதேச கல்விப் பிரிவைப(International Academic Division) புதுப்பிப்பதற்காக, 2023 செப்டம்பர் 01 மற்றும் 2024 அக்டோபர் 24 ஆகிய திகதிகளில் ஆலோசனைச் சேவைக் கட்டணமாக ரூபா 1.75 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அப்பணிகள் மேற்கொள்ளப்படாததால் அந்தச் செலவினம் ஒரு வீண் செலவீனமாக மாற்றமடைந்துள்ளது. | ஆலோசனை நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட, மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 90 மில்லியன் பெறுமதியான முப்பரிமான வரைபடங்கள் (Drawings 3D’s) மற்றும் அளவுப்பட்டியலுக்கு (BOQ) ஒப்பந்தத்தின்படி செலுத்த வேண்டிய ஆலோசனைச் சேவைக் கட்டணத்தில் 70 சதவீதம் செலுத்தப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்திற்கான பெறுகை நடவடிக்கைகளை எதிர்காலத்தில் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. | இரண்டாம் தளத்தில் அமைந்துள்ள சர்வதேச பிரிவின் புனரமைப்புப் பணிகளைத் திட்டமிட்டபடி செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் அவ்வாறு செய்யத் தவறினால், அதற்குரிய செலவினங்களை அதற்குக் காரணமான பொறுப்பான நபர்களிடமிருந்து வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனத்தின் பிரதான கட்டிடத்தின் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது தளங்களில் முன்மொழியப்பட்ட உள்ளகப் புனரமைப்புப் பணிகளுக்கான திட்டத்தில், 2006ஆம் ஆண்டின் | ஒப்பந்ததாரருக்கு வழங்கக்கூடிய அதிகபட்ச கால நீடிப்பைக் கருத்தில் கொண்டு, அவருக்குச் செலுத்த வேண்டிய தொகையிலிருந்து உரிய அபராதங்களைக் கழிக்கத் | எடுக்கப்படும் நடவடிக்கைகள் அரச பெறுகை வழிகாட்டல்களுக்கு முரணாக இருக்கக்கூடாது. அத்துடன், சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் மூலம் |

| | | |
|---|---|---|
| அரச பெறுகை வழிகாட்டியின் 5.3.20 (ஆ) பிரிவிற்கு முரணாக, ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு மேலதிகமாக புதிய நிபந்தனைகள் அறிமுகப்படுத்தப்பட்டு மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. இதன் விளைவாக, தகுதிகளைப் பூர்த்தி செய்து குறைந்த விலையைக் முன்வைத்திருந்த முதல் இரண்டு நிறுவனங்களையும் விஞ்சி, மூன்றாவது குறைந்த விலையைக் முன்வைத்திருந்த நிறுவனம் முன்னிலை பெற்றிருந்தது. இதனால் மிகச் சரியான தகுதியுள்ள ஏலதாரருக்கு (Substantial Responsive Bidder) ஒப்பந்தம் கிடைக்காமையினால் நிறுவனத்திற்கு ரூபா 1.48 மில்லியன் நட்டம் ஏற்பட்டுள்ளது. இத்தெரிவின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததாரர், திட்டத்தை நிர்ணயிக்கப்பட்ட காலத்தை விட 02 மாதங்கள் 15 நாட்கள் (75 நாட்கள்) தாமதமாகவே கையளித்தார். மேலும், நேரடி ஆய்வின் போது அத்திட்டத்தில் பல குறைபாடுகள் இருப்பது அவதானிக்கப்பட்டது. திட்டம் கையளிக்கப்பட்டு ஒரு வருடம் கடந்த போதிலும், அக்குறைபாடுகளை சம்பந்தப்பட்ட ஒப்பந்த நிறுவனத்தின் மூலம் சரிசெய்வதற்கு இந்நிறுவனம் (NIBM) எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. | தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன், குறைபாடுள்ள பணிகளை மதிப்பீடு செய்து அதற்கான செலவினங்களை இறுதிப் பட்டியல்களிலிருந்து கழிக்கவும், அக்குறைபாடுகளைச் சரிசெய்யத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து எஞ்சிய தொகையைச் செலுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. | குறைபாடுகளைச் சீராக்கவும், காலதாமதக் கட்டணங்கள் மற்றும் ஏற்பட்ட நட்டங்களை அதற்குப் பொறுப்பான அதிகாரிகளிடமிருந்து வசூலிக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் தொகுப்பிற்கு அமைய, 2024 டிசம்பர் 31ஆம் திகதியன்றிருந்தவாறு, கல்வி சாரா ஊழியர் பிரிவில் 22 வெற்றிடங்களும், கல்விசார் ஊழியர் பிரிவில் 03 வெற்றிடங்களும் காணப்பட்டன. | தொடர்புடைய பணியாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தொடர்ச்சியான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. | வெற்றிடங்கள் உருவாவதைத் தவிர்ப்பதை உறுதி செய்வதற்காக, ஒரு வாரிசுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கும் அதனை அடிக்கடி மீளாய்வு |

| | | | |
|---|---|---|---|
| | | | செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | நிறுவனத்தில் 2020 முதல் 2024 வரையான காலப்பகுதியில் ஊழியர் வெளியேற்ற விகிதம் அதிகரித்துள்ளது அதற்கமைய, ஊழியர் வெளியேற்ற விகிதமானது 2.97 சதவீதத்திலிருந்து 15.86 சதவீதத்தமாக உயர்வடைந்துள்ளது. | அது அவதானிக்கப்பட்டது | ஊழியர் வெளியேற்றத்தைக் குறைப்பதற்காக அரசாங்கத்தின் ஆதரவுடன் ஒரு குறிப்பிட்ட வேலைத்திட்டம் உருவாக்கப்பட வேண்டும். |
| (இ) | 1976ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனச் சட்டத்தின் 16(2) மற்றும் 16(5) ஆகிய பிரிவுகளின் கீழ் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு இணங்க, தற்போதைய பணிப்பாளர் நாயகம் 2017 மார்ச் 06 ஆம் திகதி முதல் 5 ஆண்டு காலத்திற்கு நியமிக்கப்பட்ட போதிலும், அந்தத் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின்படி தேவையான குறைந்தபட்ச தகுதிகளை அவர் பூர்த்தி செய்திருக்கவில்லை. | முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் 2016ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் 1976ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க தேசிய வியாபார முகாமைத்துவச் சட்டம் ஆகியவற்றிற்கு அமைய, பணிப்பாளர் நாயகம் பதவிக்கான வயது எல்லையைக் கருத்திற் கொள்ளாமல், ஐந்து வருட காலப்பகுதிக்காக உரிய அமைச்சினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. | தேசிய வியாபார முகாமைத்துவச் சட்டம் மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டத்தின் படி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |